REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4] சென்னை: வைகாசி 12உ சனி (25—5—57) ★ ★ வெளியூர்: வைகாசி 13உ ஞாயிறு (26—5—57) இதழ் [297

மாஸ்கோ—பீகிங் தலைநகர்களை இணைக்கும் 5,000 மைல் நீளமுள்ள நேர் இரயில் பாதை!

ரஷ்யத் தலைநகரான மாஸ்கோவிலிருந்து சீனத் தலைநகரான பீகிங்வரை சீன—ரஷ்யப் பொறியியல் நிபுணர்கள் இரயில் பாதை அமைத்துள்ளனர்.

இராணுவ, பொருளாதார முக்கியத்துவமுள்ள இந்த இரயில் பாதையின் நீளம் 5,000 மைல்களாகும்.

சென்ற செவ்வாயன்று முதல் தடவையாக மாஸ்கோவிலிருந்து பீகிங்கிற்கு பிரயாணிகள் இந்த இரயிலில் புறப்பட்டுள்ளனர். மங்கோலியா வழியாக அந்த இரயில் பீகிங் வந்தடைய 10 நாட்கள் பிடிக்குமாம்.

தமிழ் மாநில சர்க்காரின் அசமந்தம்

புதிய வரி விதிப்பின் கொடிய விளைவு

விலைவாசிகள் மேலும் விஷம்போல் ஏறுகின்றன

மந்திரிகளோ 'அகில இந்தியா' பேசுகின்றனர்

புள்ளிவிவரம் சேகரிக்கப் போவதாகக் கூறுகின்றனர்

சென்னை, மே 25—

விலை ஏற்றம் குறித்து தமிழ் மாநில மந்திரிகள் கொண்டுள்ள கவலை இருக்கிறதே—சொல்லுந்தரமன்று!

'புதிய வரி விதிப்புத் திட்டங்களால் விலைவாசிகள் மேலும் ஏறிக்கொண்டே செல்கின்றனவே, இது ஒரு பெரும் பிரச்சினை அல்லவா?' என்று பத்திரிகையாளர் கேட்டபோது, முதன் மந்திரி காமராசரும், நிதி மந்திரி சுப்பிரமணியமும், 'ஆமாம், பெரிய பிரச்சினைதான்; இல்லையென்று யார் சொன்னார்கள்? ஆனால் இதற்குப் பரிகாரம் அகில இந்திய மட்டத்தில் அல்லவா தேடப்பட வேண்டும்?' என்று கூறினார்களாம்!

"சர்க்கார் விதிக்கும் வரிகளைச் சாக்காகக்கொண்டு, மக்களின் அறியாமையைப் பயன்படுத்தி விலைகளை அளவுக்கு மீறி உயர்த்தி விடுகிறார்கள்; என்செய்வது?" என்றாராம், காமராசர்!

மந்திரி சுப்பிரமணியமோ, தங்களின் புள்ளி விவர அதிகாரியைக்கொண்டு, மத்திய சர்க்கார் புதிய வரிகளை விதிக்கு முன் இருந்த விலைவாசி நிலை குறித்தும், வரிவிதிப்பு அறிவிப்பிற்குப் பிறகு ஏற்பட்டுள்ள விலைவாசி நிலை குறித்தும் புள்ளி விவரம் சேகரிக்குமாறு கேட்கப் போவதாகக் கூறி, தமிழ் மாநில சர்க்காரின் அசமந்தப் போக்கினை எடுத்துரைத்திருக்கிறார்.

"'பட்ஜெட்' வெளியிடப்பட்ட பிறகு, பல அத்தியாவசியப் பொருள்களின் விலை அநியாயமாக ஏற்றப்பட்டிருப்பதைத் தடுக்கவும், விலைவாசிகளை ஒழுங்குபடுத்தவும் சர்க்கார், தீவிரமான — கடுமையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று பத்திரிகைப் பிரதிநிதிகளால் கேட்கப்பட்டபோது தான் மந்திரிகள் அவ்வாறு கூறியிருக்கின்றனர்.

மின்சார இரயில் பாதை அமைப்பு

அந்நிய நிறுவனங்களின் உதவி கோரப்படுகிறது

புதுடில்லி, மே 24—

இரயில்வேக்களில் சில பிரிவுகளை மின்சார மயமாக்குவது என்ற இரண்டாம் ஐந்தாண்டுத் திட்ட யோசனைகளை அமுல் செய்வதில் உதவுவதற்கு, அன்னிய நாடுகளில் உள்ள நிறுவனங்களின் தொழில் நுட்ப உதவியை டில்லிப் பேரரசு கோரியிருப்பதாகத் தெரிய வருகிறது.

சர்க்கார் தேர்ந்தெடுக்கும் நிறுவனத்தார், இந்தியாவில் இரயில் பாதைகளுக்கு மின்சார வசதி அமைத்துத் தருவதில் பல வழிகளிலும் ஒத்துழைப்பர் என்று தெரியவருகிறது.

புதுடில்லி, மே 25—

சமீபத்தில் மூன்று ஆலைகள் மூடப்பட்டதேன் என்று விசாரணை நடத்த இந்திய அரசாங்கம் யோசித்து வருவதாகத் தொழில் அமைச்சர் தேசாய் தெரிவித்துள்ளார்.

ஐந்தாண்டுத் திட்டங்களால் மக்கள் வாழ்வு உயருகிறதாம்!

பணக்காரருக்குத்தான் அதிக வரி விதிப்பாம்!

ஏற்காடு தொகுதியில் காமராசரின் பொய்ப் பிரச்சாரம்

சேலம், மே 25—

ஐந்தாண்டுத் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஏராளமான பணம் இந்தியப் பேரரசுக்குத் தேவைப்படுகிறதாம்! டில்லிப் பேரரசின் ஐந்தாண்டுத் திட்டங்களால் நாட்டில் மக்களின் நிலைமை மிகமிக உயர்ந்துகொண்டே வருகிறதாம்! உயர்ந்துவரும் மக்களின் நிலைமை மேலும் மேலும் முன்னேறிச் செல்லவேண்டுமே என்ற கவலை மேலீட்டால்தான்—அந்தத் திட்டங்களையெல்லாம் நிறைவேற்றப் பணம் வேண்டுமே என்ற காரணத்திற்காகவேதான் இந்தியப் பேரரசினர் இப்போது பலப்பல புதிய வரிகளைச் சுமத்தியிருக்கிறார்களாம்!

வரிப் பளுவை ஏன் இந்தியப் பேரரசினர் அதிகப்படுத்தியிருக்கிறார்கள் என்பதற்கான காரணத்தை ஆராய்ந்து அலசிப் பார்த்து வெளியிட்டிருக்கிறார், இந்த மாநிலத்தின் முதலமைச்சர் பீடத்திலமர்ந்து கொண்டிருக்கும் காமராசர்!

புதிய வரிகளால் ஏழைகள் அதிகமாகப் பாதிக்கப்படமாட்டார்கள் என்றும், பணக்காரர்களுக்குத்தான் அதிக வரிச் சுமை என்றும், பணக்காரர்களுக்கெல்லாம் வரி விதிக்கின்றபோது, ஏழைகளையும் சும்மா விடக்கூடாது என்பதற்காகவே அவர்களிடமும் வரி விதிக்கப்பட்டிருக்கிறதாகவும் பெரியதொரு பொய்யையும் கூறியிருக்கிறார் காமராசர்.

தம்முடைய இந்த வியாக்கியானத்திற்கு அருமையான ஒரு விளக்கமும் அளித்திருக்கிறார்!

"ஏழைகள், ஒரு மாதத்தில் 4 தீப்பெட்டிகள்தான் உபயோகிப்பார்கள்; ஒரு தீப்பெட்டி மீது காலணா மட்டுமே வரி விதிக்கப்பட்டிருக்கிறது; ஆகவே, ஏழைகளுக்கு மாதம் ஒன்றுக்கு தீப்பெட்டிக்காக மட்டும் ஒரு அணா தான் அதிகமாக செலுத்த வேண்டியிருக்கிறது; எனவே, இப்படிப்பட்ட வரிகளால் ஏழைகள் ஒன்றும் கெட்டுவிடமாட்டார்கள்" என்று, திருவாய்மலர்ந்திருக்கிறார் முதலமைச்சர்!

கோயில் சொத்துக்களையெல்லாம் ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று ஒரு கேள்வியைக் கேட்டுக்கொண்டு அதற்குத் தாமே பதிலும் சொல்லியிருக்கிறார்!

"கோயில் சொத்துக்கள் நாட்டில் கொஞ்சந்தான் இருக்கின்றன. சுமார் ரூ. 10 கோடி மதிப்புள்ள அந்தச் சொத்துக்களை சர்க்கார் எடுத்துக்கொண்டால் சர்க்காரின் மூன்று மாதச் செலவுகளுக்குக்கூட போதுமானதாகாது; எனவேதான் சர்க்கார் அந்நடவடிக்கை எடுக்கவில்லை" என்று, 'அறிவித்து' விட்டாராம்!

ஏற்காடு தொகுதியில் நடைபெற இருக்கின்ற மறுதேர்தலையொட்டி இங்கு வந்திருந்த முதலமைச்சர் காமராசர்தான் மேற்குறிப்பிட்டிருக்கிற முத்து முத்தான காரணகாரியங்களை மணி மணியாக உதிர்த்திருக்கிறார்! (ந. கி.)

'அணுகுண்டு சோதனைகளை உடனே நிறுத்துக?'

இந்தியா ஜப்பான் கூட்டறிக்கை

புதுடில்லி, மே 24—

இந்தியப் பிரதமர் பண்டித நேருவும், ஜப்பான் பிரதமர் கிஷியும் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில், அணு ஆயுத சோதனைகளை உடனே நிறுத்துமாறு வல்லரசுகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

மின்சார வெட்டு ரத்து

சென்னை, மே 25—

நீர்த்தேக்கங்களில் நீர்மட்டம் உயர்ந்திருப்பதின் காரணமாக சென்னை மாநிலம் முழுவதும் விதிக்கப்பட்டிருந்த எல்லாவிதமான மின்சார வெட்டுகளும் இன்றுமுதல் ரத்து செய்யப்பட்டுள்ளதாகத் என்று தெரிய வருகிறது.

இரயில் வாகன்கள்

தயாரிக்கப்படும் தொழிற்சாலைகள்

இந்தியப் பேரரசின் திட்டம்

புதுடில்லி, மே 23—

இந்தியாவில் இரயில் வாகன்கள் தயாரிப்பதற்காக 15 தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்படுமாம். அவை வடக்கே 8-ம், தென் பகுதியில் 2-ம், மேற்கு பகுதியில் பகுதியில் 3-ம், கிழக்குப் பகுதியில் 2-ம் ஆக அமைக்கப்படுமாம்.

ஒவ்வொரு தொழிற்சாலையும் ஆண்டுதோறும் 1,000 வாகன்கள் தயாரிக்கும் சக்தி வாய்ந்ததாக இருக்குமாம்.

அணு, நீர்வளிக் குண்டுகளைத் தடைசெய்ய இயக்கம்

ஜப்பான்சோஷலிஸ்டுகள் துவங்குவர்

டோக்கியோ, மே 24—

அணு, நீர்வாயு குண்டுகளைத் தடைசெய்ய வேண்டுமெனக் கோரி, உலக முழுவதிலுமாக ஒரு இயக்கம் நடத்த ஜப்பான் நாட்டு சோஷலிஸ்டு கட்சி தீர்மானித்திருக்கிறதாம்.

முதலில் பிரிட்டன், அமெரிக்கா, ரஷ்யா ஆகிய நாடுகளுக்கு வரும் ஜூலை மாதம் ஜப்பானிலிருந்து ஆட்சேபத் தூதுக் குழுக்கள் செல்லும் என்றும், இது, இயக்கத்தின் துவக்கம் என்றும் கூறப்படுகிறது.

மக்கள் சபையில் தாய்மொழியில் பேசலாம்

"ஆங்கிலமோ, இந்தியோ தெரியாத மக்கள் சபை உறுப்பினர்கள் தாய் மொழியில் மக்கள் சபையில் பேசலாம்" என்று அவைத் துணைத் தலைவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கத் தூதுவராலயம் தாக்கப்பட்டது

தைப்பேயில் சம்பவம்

தைப்பே, மே 24—

வீறுகொண்டெழுந்த சீன மக்கள் கூட்டம் ஒன்று இங்குள்ள அமெரிக்கத் தூதுவராலயத்தின் மீது கல்மாரி பொழிந்தது என்றும், அதன் விளைவாக அலுவலகத்தை, தேசிய சீனத் துருப்புகள் பாதுகாத்து வருவதாகவும் தெரிகிறது.

சம்பவத்திற்குக் காரணம் என்ன?

பார்மோசாவை ஆளும் கோமின்டாங் கட்சியைச் சேர்ந்த லூசி - ஜன் என்பவர், அமெரிக்க அதிகாரி ஒருவரின் வீட்டிற்குள் ஒருநாள் இரவு புகுந்து அவரது மனைவியின் அறைக்குள் நுழைந்ததாகவும், இதைக் கண்ட ரெய்னல்ட்ஸ் என்ற அந்த அமெரிக்க அதிகாரி தனது கைத்துப்பாக்கியினால் அந்தச் சீனரைச் சுட்டு வீழ்த்தியதாகவும் கூறப்படுகிறது.

இராணுவ நீதி மன்றத்தில் விசாரிக்கப்படுகையில், தான் தற்காப்பிற்காகவே அவ்வாறு சுட்டதாக அவர் கூறினாராம்.

இவர் குற்றமற்றவர் என்று தீர்ப்பளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டாராம்.

இந்தத் தீர்ப்பு கண்டு, தைப்பே மக்கள் ஆத்திரப்பட்டனராம்.

அதன் விளைவாகத்தான் அவர்கள், அமெரிக்கத் தூதுவராலயம், தகவல் நிலையம் இவற்றைத் தாக்கி சூறையாடியதுடன், அமெரிக்கக் கொடியையும் கிழித்து, அலுவலகங்களிலிருந்து இரகசிய தஸ்தாவேஜுகளையும் வீதிகளில் வீசி எறிந்திருக்கின்றனர்.

தூதுவராலுவலகத்திலிருந்த ஐந்து அதிகாரிகளையும் நையப் புடைத்திருக்கின்றனர்.

விடுதலை செய்யப்பட்ட ரெய்னல்ட்ஸ், மற்றும் அவரது மனைவி கிளாரா, ஒன்பது வயது மகள் ஆகியோர் இராணுவப் பாதுகாப்புடன் தைப்பேயிலிருந்து ஓட்டம் பிடித்திருக்கின்றனர்.

தென்னாட்டில் புதிய இரயில்பாதை அமைப்புகள் உண்டா?

மக்கள் சபையில் ஈ. வெ. கி. சம்பத் கேள்வி

புதுடில்லி, மே 24—

தென்னாட்டில் புதிய இரயில்பாதைகள் அமைப்பது பற்றி டில்லி சர்க்கார் கருத்தென்ன என்பதை அறிய நமது தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், மக்கள் சபையில் கேள்வி ஒன்று எழுப்பியிருக்கிறார்.

தோழர் சம்பத் அவர்களின் கேள்விக்குப் பதிலளித்த இரயில்வே இலாகா உதவி மந்திரி கூறியதாவது:—

(1) பெங்களூர்—சேலம் இரயில்பாதை அமைப்புக்கான போக்குவரத்து 'சர்வே' முடிந்துவிட்டது; எஞ்சினீயரிங் 'சர்வே' நடைபெறுகிறது. (2) வேலூர்—காஞ்சீபுரம்; (3) திருநெல்வேலி — திருவனந்தபுரம் — கன்னியாகுமரி 'சர்வே' முடிவுற்றுவிட்டது; அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது; (4) சின்னசேலம்—செங்கற்பட்டு பாதைக்கான போக்குவரத்து 'சர்வே' நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

புதுடில்லி, மே 24—

இந்தியாவின் வடகிழக்குப் பகுதியில் 'தோரியம்' போன்ற உலோகப் பொருள்கள் இருப்பதை இந்திய அணுசக்தி இலாகா கண்டுபிடித்துள்ளதாக பண்டித நேரு மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

நம் நாடு

தி.மு.கழகத்தின் இதழ்

சென்னை 25—5—57 சனி

கண்டனக் குரலெழுப்புவீர் !

ஐந்தாண்டுகளுக்குப் பிறகு நல்வாழ்வளிக்கப் போவதாக ஆசைவார்த்தைக் கூறி, நடுத்தர—ஏழை மக்களின் வயிற்றில் அடிக்க முன்வந்திருக்கின்றார் நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்.

ஐந்தாண்டுக்குப் பின்னர் தரப்போவதாக அவரால் குறிப்பிடப்படும் நல்வாழ்வு, வெறும் கற்பனைதான் என்பதை முதல் ஐந்தாண்டுத் திட்ட விளைவு மெய்ப்பிக்கிறது.

அரிசியின் விலை, ஏழையின் வாங்கும் சக்தியை மிஞ்சி நிற்கின்றது.

அவ்விலை உயர்வைத் தடுத்து, ஏழையின் வாங்கும் சக்திக்கொப்ப, அரிசியின் விலையைக் குறைக்கவேண்டும் என்பதில், கண்டிப்பாக இருந்துத் தீர வேண்டிய அக்கறை இந்தியப் பேரரசிற்கு இருப்பதாகக் காணோம்.

புளி, பருப்பு வகைகள், மிளகாய், மிளகு போன்ற உணவுப் பண்டங்களின் விலையும், ஏழைகளுக்கு எட்டாப் பண்டங்களாகவே இருந்து வருகின்றன.

அப்பண்டங்களையும் மலிவான விலைக்கு, ஏழை மக்களுக்குக் கிடைக்கச் செய்யவேண்டுமே என்ற கருத்து இந்தியப் பேரரசிற்கு அறவே இல்லை.

இந்நிலையில் வெந்த புண்ணில் கூர்கொம்பு கொண்டு குத்துவதுபோல், சர்க்கரை, தேயிலை, காபி, புகையிலை போன்ற இன்றியமையாப் பொருட்களுக்கு வரிபோட காங்கிரசு ஆட்சியின் பெயரால் நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் துணிந்து முன்வந்திருக்கிறார்.

பண்டங்களின் விலை ஏறுவதும், வாழ்க்கைச் செலவு கூடுவதும், ஏழை மக்களின் ஏற்கனவே மிகமிகக் குறைந்துள்ள வாழ்க்கைத்தரம் மேலும் குறைந்து விடுவதும் உண்மையில் நிகழக் கூடியதாகும்.

இக்கேட்டினை மறுக்கவில்லை காங்கிரசு ஆட்சி. அதற்கு மாறாக கிராமப் பகுதிகளில் முக்கால் சதவிகிதம்தான் பண்டங்களின் விலை உயரக்கூடும்—நகரப்புறங்களில் ஒன்றே கால் சதவிகிதந்தான் விலை கூடக்கூடும் என்று புள்ளிவிவரமும் பேசி கேட்டின் தன்மையைக் குறைத்துக் காட்ட முன்வந்துள்ளார் நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார்.

அதுவுமன்றி, சர்க்கரை, தேயிலை, காபி, ஆகிய மூன்றும் கிட்டத்தட்ட ஆடம்பரப் பண்டங்களாகும் என்றும், நிதி அமைச்சர் புதுப்பொருள் விளக்கமும் கூறியுள்ளார்.

சர்க்கரையை ஏழை மக்கள் வாங்கிப் பயன்படுத்துவது குறையவேண்டும் என்ற முடிவின் மீதே, சர்க்கரைக்கு வரி விதிக்கத் தாம் முன்வந்ததாகவும் நிதி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

சர்க்கரையின் மீது போட்டுள்ள வரியின் காரணமாக, சர்க்கரைப் பெரும்பான்மையான ஏழை மக்களால் வாங்கிப் பயன்படுத்த முடியாது போகும்; அந்நிலையில் மேலும் கூடுதலாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய அளவில் சர்க்கரை உள்நாட்டில் விலை போகாது மீதமாகும்: என்ற நினைப்பில்தான் சர்க்கரையின் மீது வரி விதித்திருக்கின்றார் நிதி அமைச்சர் என்பது, அவர் கூற்றிலிருந்தே விளக்கமாகின்றது. இருந்தாலும், அவரேதான் கூறுகின்றார் சர்க்கரை மீது போடப்பட்டுள்ள வரியினால், ஏழை மக்கள் பாதிக்கப்படமாட்டார்கள் என்று.

புகையிலை வரியும் ஏழை மக்களை நேரடியாகப் பாதிக்கக் கூடியதேயாகும். புகையிலைக்கு முதல் முதலாக சென்னையில் அன்னிய ஆட்சியினர் வரிபோட முன்வந்தபொழுது, காங்கிரசுக் கட்சியினர் 'ஏழை மக்கள் ஆகாரத்தின்மீது வரி விதிப்பதா? என்று கேட்டு, எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர். அதே கட்சியினர்தான் இன்று புகையிலைக்கு ஏற்கனவே இருந்த வரி போதாதென்று புது வரி போடத் துணிந்துள்ளனர்.

அஞ்சல் அட்டையின் விலை உயர்வு குறைக்கப்பட்டு அஞ்சல் உறையின் விலை கூட்டப்படும் எனத் தெரிகின்றது.

சிமெண்டுக்கும் வரி - இரும்புப் பொருட்களுக்கும் வரி. நடுத்தர மக்கள் இவ்விரண்டு வரிகளினாலும் நிச்சயமாகப் பாதிக்கப்படுவர்.

இரண்டாம் திட்டத்தை வைத்துத்தான், பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி போட்டியிட்டதாகவும், அதை விளக்கமாகத் தெரிந்துகொண்டுதான் பொதுமக்கள் காங்கிரசுக் கட்சியை ஆட்சிபீடத்தில் அமர்த்தத் துணிந்தனர் என்றும் நிதி அமைச்சர் கிருஷ்ணமாச்சாரியார் வீரம் பேசியுள்ளார் மக்கள் சபையில்.

பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி மக்களின் ஆதரவை எவ்வாறு தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு ஆட்சியைக் கைப்பற்றி இருக்கின்றது என்பது தூற்றும் விஷயம் சாக்கடை.

விவாதத்திற்காக, திட்டத்தை மக்களிடம் விளக்கிக் கூறித்தான் மக்கள் ஆதரவை காங்கிரசுக் கட்சி பெற்றதாகவே வைத்துக் கொள்ளுவோம். திட்டத்தை மக்கள் முன்வைத்து நேர்மையாக தேர்தலில் ஈடுபட முன்வந்த காங்கிரசுக் கட்சி, இன்று அதிகாரத்தில் அமர்ந்த பிறகு திட்டத்தின் பெயர் கூறி போடத் துணிந்துள்ள வரிகள் அனைத்தையும், தேர்தலுக்கு முன் மக்களிடம் எடுத்துக்கூறி இருக்கவேண்டியதல்லவா நியாயமானதாகும்? திட்டத்தின் மீது மக்கள் தீர்ப்பைக் கோரியது போன்றே, இப்புதுவரிகள் மீதும் அல்லவா மக்கள் தீர்ப்பை அப்பொழுதே கோரியிருக்கவேண்டும்? ஏன் காங்கிரசுக் கட்சி, வரிகளைக் காட்டி மக்கள் முடிவைக் கேட்க அஞ்சி தயங்கிவிட்டது? பதில் தருவாரா நிதி அமைச்சர்.

அதிகாரத்தில் அமர்ந்துவிட்ட தம் கட்சியை, சட்டத்திற்குட்பட்டு அமைதியான முறையில் வெளியேற்றுவதற்கு மக்கள் உரிமை பெற்றிருக்கவில்லை என்றத் துணிவில், நிதி அமைச்சர் இன்று, இதுவும் பேசலாம்—இதற்கு மேலும் பேசலாம்! பேசுவதென்ன? கொக்கரிக்கக்கூட கொக்கரிக்கலாம் நிதி அமைச்சர்!

இரண்டாம் திட்டத்தின் மூலம் தமிழகம் பெற இருக்கும் குறிப்பிடத்தகுந்த பலன் நெய்வேலித் திட்டம் ஒன்றே ஒன்றுதான். அதிலும் ஐந்தில் ஒரு பகுதியைத்தான் நடைமுதல் ஆண்டில் மேற்படித் திட்டத்தின் மூலம் பெறப் போகின்றனர். அதற்காக, நிதி அமைச்சர் போடும் புதுவரிகள் அனைத்தையும் தமிழகத்தாரும் கொட்டிக் கொடுக்கத்தான் வேண்டுமா? இது என்ன நியாயம்? இதற்குத்தான் இருக்கின்றது ஏக இந்திய ஆட்சி போலும்!

புதுவரிகளை எதிர்த்துக் கண்டனம் கிளம்பட்டும்! பொதுக் கூட்டங்கள் கூட்டி, புது வரிகளை எடுத்து விளக்கி, பொதுமக்களை ஒன்று திரட்டுங்கள். அமைதியாக ஊர்வலம் செல்லுங்கள். கட்டுப்பாடு — கண்ணியம் — கடமை என்ற, நமது கழகத்தின் மூன்று அடிப்படைப் பண்புகளுக்குக் கடுகளவும் களங்கம் ஏற்படாத வகையில், ஏழை மக்களின் முதுகெலும்பை முறித்துவிடக் கூடிய புது வரிகளைக் கண்டித்துத் தீர்மானம் நிறைவேற்றுங்கள்.

இந்தியாவின் நிதி ஆதாரம் கரைகிறது?

கையிருப்புப் பற்றி தகவல்

இவ்வாண்டு ஏப்ரல் ஆரம்பத்தில் இந்தியாவின் வெளிநாட்டு நாணய ரிசர்வ் நிதி ரூ. 583,27,00,000 - ஆக இருந்ததென்றும், மே ஆரம்பத்தில் ஸ்டர்லிங் நிலுவை - இதுதான் இந்தியாவின் பிரதான வெளிநாட்டு நிதி ஆதாரம் - ரூ. 496,42,00,000 - ஆக இருந்ததென்றும், அதில் ரூ. 60,70,00,000 சர்வதேச நிதியிலிருந்து சென்ற பிப்ரவரி - மார்ச்சில் பெற்றுக்கொள்ளப்பட்டதென்றும் மத்திய நிதி மந்திரி மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

சென்ற ஆண்டு மே ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணய ரிசர்வ் நிதி ரூ. 751,36,00,000 ஆக இருந்தது; அதில் ரூ. 721,50,00,000 ஸ்டர்லிங் நிலுவை என்றும் அவர் தெரிவித்தார்.

தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு ஊழல்

ஆதாரமற்றது என்கிறார் மத்திய அமைச்சர்

புதுடில்லி, மே 23—

தாமோதர் நதிப் பள்ளத்தாக்கு நிறுவனத்தில் பண ஊழல்கள் நடந்திருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரம் கிடையாதென்று மத்திய நீர்ப்பாசன அமைச்சர் மக்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

பாட்டியாலா மகாராஜாவிடமிருந்து ரூ. 70,000 செலவில் 35 படகுகள் வாங்கப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு செய்தது சரியான காரியமென்றுதாம் நினைப்பதாகவும் அமைச்சர் கூறியுள்ளார்.

செங்கற்பட்டு - சின்ன சேலம் இரயில் பாதை

சின்னசேலம் — செங்கற்பட்டு இரயில்வே போக்குவரத்து துப்புரவு வேலை 1957 ஜூன் இறுதியில் முடிவு பெறுமாம்.

'எல்லா அம்சங்களிலும் கைவைத்தாகிவிட்டது'

'எதிர்காலத்தில் நெருக்கடி ஏற்பட்டால் வழிமுறையே இல்லை'

வரி விதிப்புக் கொடுமை குறித்து மாநிலங்கள் சபையில் கண்டனம்

புதுடில்லி, மே 22—

"நிதிமந்திரி, வரி விதிக்கக் கூடிய எல்லா அம்சங்களிலும் கைவைத்துவிட்டார்; இதனால், எதிர்காலத்தில் வரக் கூடிய நிதி மந்திரிகள், ஏதேனும் அவசர நெருக்கடிகள் ஏற்பட்டால், புதிய வரி விதிப்புக்கான வழி ஏதுமே இல்லாது போய்விடுகிறது," என்று, பிரபல பொருளாதார நிபுணரான டாக்டர் ராதாகுமுத் முகர்ஜி என்பார் மாநிலங்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

மாநிலங்கள் சபையின் நியமன உறுப்பினரான அவர் மேலும் பேசுகையில், நிதி அமைச்சர் புரட்சிகரமான நிதிமுறைகளைக் கையாள வேண்டும் என்றும் அதனால் வரிகளைக் குறைத்தால் வாழ்க்கைச் செலவைக் குறைக்க முடியும் என்றும், அதனால் மக்கள் மிச்சப்படுத்த முடியும்— அந்தச் சேமிப்பைக் கொண்டு தொழிலில் ஈடுபடலாம் என்றும் கூறியிருக்கிறார்.

மோசடி

பி. நாராயணன் நாயர் என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் பேசுகையில், 'சமூக நல வேலைகள் என்ற பெயரில் செலவழிக்கப்பட்ட பெருந்தொகை அத்தனையும் மோசடி செய்யப்பட்டிருக்கிறது; கேரளத்தில் மாநில சமூக நல போர்டு, ரூ. 47,000 தொகையை விநியோகிக்க ரூ. 1,70,000 செலவிட்டிருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்.

சபையில் பேசிய டாக்டர் குன்ஸ்ரு, மறைமுக வரிகள் அதிகமாக உள்ளன என்றும், இதனால் ஏழை மக்கள் பெரும்பாலும் பெருவாகப் பாதிக்கப்படுவார்கள் என்றும், ஏழை - எளிய மக்கள் உபயோகிக்கக்கூடிய தேயிலை, காப்பி, தீப்பெட்டி முதலியவைகளுக்குக்கூட வரியை அதிகரித்திருப்பது கண்டனத்திற்குரியது என்றும் கூறியிருக்கிறார்.

இந்தப் புதிய வரி விதிப்புகளினால் மேலும் பணவீக்கம்தான் ஏற்படும் என்றும், அது ஆபத்தானது என்றும் எச்சரித்துள்ளார்.

டில்லியின் புதிய வரிகள்

சில புள்ளி விவரங்கள்

டில்லி சர்க்கார் இந்த ஆண்டு முதல் விதிக்க உத்தேசித்துள்ள புதிய வரி விகிதங்களின்படி நடைமுறை நிதி ஆண்டில் மத்திய சர்க்காருக்கு ரூ. 77·85 கோடியும், மாநிலங்களுக்கு ரூ. 15 கோடியும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

வரி விகிதங்கள் அதிகரிக்கப்படும் பொருள்களும் விவரங்களும், முக்கியமானவை மட்டும் கீழே தரப்படுகின்றன :—

பெட்ரோல்

பெட்ரோல் மீது விதிக்கப்படும் வரி காலனுக்கு 98 புதிய காசிலிருந்து 125 காசாக உயர்த்தப்படுகிறது; இதனால் பஸ் போக்குவரத்துக் கட்டணம் உயரும் அபாயம் இருக்கிறது.

சர்க்கரை

சர்க்கரைக்கு விதிக்கப்படும் வரி அந்தருக்கு 5·52 புதிய காசிலிருந்து 11·24 புதிய காசாக உயர்வு.

தேயிலை

உதிரித் தேயிலை மீது விதிக்கப்படும் வரி பவுண்டுக்கு 6·26 புதிய காசிலிருந்து 10 காசாக உயர்வு.

பாக் செய்த தேயிலை (உதிரியிலிருந்து மாற்றப்பட்டது) பவுண்டுக்கு 18·75 காசிலிருந்து 35 காசாக உயர்வு.

பாக் செய்த தேயிலை (உதிரியிலிருந்து மாற்றப்படாதது) பவுண்டுக்கு 25 காசிலிருந்து 45 காசாக உயர்வு.

காப்பி

காப்பி, புகையிலை மீதும் வரி விகிதங்கள் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

கார்டு

தபால் கார்டு விலை, 5 புதிய காசிலிருந்து 6 புதிய காசாக —அதாவது முக்காலணாவிலிருந்து ஓரணாவாக உயர்த்தப்பட்டிருக்கிறது.

இரயில் கட்டணம்

இரயில் பிரயாணக் கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது.

30 மைல் வரை பிரயாணம் செய்வோர் 5 சதவிகித கட்டண உயர்வும், 31 முதல் 500 மைல் வரை பிரயாணம் செய்வோர் 15 சதவிகித வரி உயர்வும், அதற்குமேல் பிரயாணம் செய்வோர் 10 சதவிகிதக் கட்டண உயர்வும் தர வேண்டும்.

தந்தி

சாதாரணத் தந்திக்கு, தந்திக் கட்டணமும் வார்த்தைக்கு ஏழு காசிலிருந்து எட்டுக் காசாகவும், அவசரத் தந்திக்கு 14 - காசிலிருந்து 16 காசாகவும் உயர்த்தப்பட்டிருக்கிறது.

சிமெண்டு

சிமெண்டிற்கு டன் ஒன்றுக்கு விதிக்கப்பட்ட ரூ. 5 வரி இனி ரூ. 20-ஆக உயரும்.

உருக்கு

உருக்கு மீதுள்ள வரி இனி டன்னுக்கு ரூ. 4-ஆக இருந்தது ரூ. 40 - ஆக உயரும்.

வருமானம்

இனி மாதம் ரூ. 250-ம், அதற்கு மேலும் வருமானமுடையவர்களும் வருமான வரி செலுத்த வேண்டும். முன்பு ரூ. 380-ம் அதற்கு மேலும் வருமானமுடையவர்களே வரி விதிக்கப்பட்டனர்.

மற்றும் சொத்துக்கள்மீதும், செலவினங்கள் மீதும் வரி விதிப்பு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவுக்கு 1,60,000 பேல் அமெரிக்கப் பருத்தி

பம்பாய், மே 22—

மேலும் 1,60,000 பேல் அமெரிக்கப் பருத்தி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்தத் தகவலை இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

தாஜ்மகால் - செங்கோட்டை பராமரிப்புச் செலவு

மக்கள் சபையில் தகவல்

1956—57-ல் தாஜ்மகால் பராமரிப்புக்காக ரூ. 42,150; டில்லி செங்கோட்டைப் பராமரிப்புக்காக ரூ. 28,260 செலவிடப்பட்டதாம்.

1957—58-ல் தாஜ்மகாலுக்கு ரூ. 1,11,000; செங்கோட்டைக்கு ரூ. 13,300 செலவிட உத்தேசித்திருப்பதாக மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

சிமெண்டும் உருக்கும் சிக்கனமாகச் செலவிட வேண்டுமாம்

இரயில்வே மந்திரியின் யோசனைக்கு முதல் பலி சென்னை!

புதுடில்லி, மே 23—
சிமெண்டு, மற்றும் உருக்கு ஆகியவற்றை வீணாக்காமலிருக்க, டில்லி சர்க்கார் முடிவு செய்திருக்கிறார்களாம்! எனவே அதற்காக, பெருமை கூறும் மாளிகைகள் எழுப்புவதை நிறுத்திவிடப் போகிறார்களாம்!

இதற்கு முதற் பலி, சென்னைதானாம்! இங்கு கட்டப்படுவதாயிருந்த பல அடுக்கு மாளிகை ஒன்றினைக் கட்டாமல் நிறுத்திவிடப் போகிறார்களாம்!

ஆனால், கோரக்பூரில் பெருஞ் செலவில் கட்டப்படவிருந்த ஒரு மாளிகைக்குப் பதிலாக, சிக்கனமான செலவில் ஒரு கட்டிடம் கட்டப் போகிறார்களாம்!

இத்தகவலை மக்கள் சபையில் மந்திரி ஜெகஜீவன்ராம் தெரிவித்திருக்கிறார்.

இரயில்வே அபிவிருத்தித் திட்டம்

மேலும் ரூ. 100 கோடி ஒதுக்கப்படலாம்

புதுடில்லி, மே 23—
இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் இரயில்வே போக்குவரத்து அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 1,125 கோடி போதுமானதல்லவென்றும், இன்னும் ரூ. 100 கோடி வரை அதிகமாக ஒதுக்கப்படலாம் என்றும் தெரியவருகிறது.

இரண்டாம் திட்ட காலத்தில் 6 கோடி டன் சாமான்களுக்கு இரயில்வேக்கள் போக்குவரத்து வசதி செய்து தரவேண்டியிருக்கும் என்றும், ஆனால் இப்போதையத் திட்டப்படி $4\frac{1}{2}$ கோடி டன் சமான்களுக்கான வசதியே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும், எஞ்சிய ஒன்றரை கோடி டன் சாமான்களுக்கான போக்குவரத்து வசதி செய்யவே ரூ. 100 கோடி வரை திட்ட மதிப்பு உயர்த்தப்படலாம் என்றும் கூறப்படுகிறது.

சர்க்கார் ஊழியர்களும் அரசியலும்!

நிலைமாற்றம் குறித்து கேரள முதன் மந்திரி

திருவனந்தபுரம், மே 22—
இப்போதுள்ள விதிகளின்படி சர்க்கார் ஊழியர்கள் எந்த அரசியல் கட்சியிலும் சேரமுடியாது என்றும், இதில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமானால் அது அகில இந்திய அடிப்படையில்தான் செய்யமுடியும் என்றும் கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாட் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

'இதுபற்றி சர்க்காருக்கு ஏதாவது அபிப்பிராயம் இருக்கிறதா?' என்று கேட்டபோது, 'இல்லை' என்று பதில் கூறியிருக்கிறார்.

பாலக்கோட்டில் அவர், சர்க்கார் ஊழியர்கள் எந்தக் கட்சியிலும் சேர்ந்துகொள்ளலாம் என்று கூறியதாக வந்த செய்தி குறித்து அவரிடம் கேட்கப்பட்டபோது, 'நான் அப்படிக் கூறவில்லை; சர்க்கார் ஊழியர்கள் அரசியல் கருத்துக்களையுடையவர்களாயிருக்கலாம்; ஆனால், அந்தக் கருத்துக்கள், அவர்களது கடமைகளைக் குந்தகப்படுத்தக்கூடாது என்றுதான் கூறினேன்,' என்றும் நம்பூதிரிபாட் விளக்கியிருக்கிறார்.

'சர்க்கார் ஊழியர்களின் சங்கம் தொழிற்சங்கச் சட்டப்படி பதிவு செய்யப்படவேண்டியதில்லை,' என்றும் 'அவர்கள் தங்கள் சங்கங்களுக்கு வெளியாரைத் தலைவர்களாக்கிக் கொள்வது பற்றி சர்க்கார் பரிசீலித்து வருகிறது,' என்றும் கூறியிருக்கிறார்.

406 இலஞ்ச வழக்குகள்

விசாரணை நிலை பற்றி அமைச்சர் தகவல்

புதுடில்லி, மே 24—
விசேட போலீஸ் நிறுவனம் 1956-ம் ஆண்டில் மொத்தம் 406 இலஞ்ச வழக்குகளைப் பதிவு செய்ததாம்.

இவ்வழக்குகளில் மத்திய சர்க்காரைச்சேர்ந்த கெசட் பதிவான 97 அதிகாரிகளும், இதர பிரிவைச் சேர்ந்த 401 அதிகாரி சம்பந்தப்பட்டிருந்தனராம்.

இவற்றில் 65 வழக்குகள் விசாரணைக்கு அனுப்பப்பட்டன என்றும், 98 வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்மீது இலாகா பூர்வமாக நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்கு அவை அனுப்பப்பட்டன என்றும், போதிய சாட்சியமில்லாதது காரணமாக 145 வழக்குகள் கைவிடப்பட்டன என்றும், 98 வழக்குகள் இன்னும் விசாரணையில் இருந்து வருகின்றன என்றும் மக்கள் சபையில் உள்நாட்டமைச்சர் பந்த் தெரிவித்துள்ளார்.

"நீதிமன்ற விசாரணைக்கு அனுப்பப்பட்ட 65 வழக்குகளில், ஏழு வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனை பெற்றனர்; ஐந்து வழக்குகளில் குற்றவாளிகள் விடுதலை செய்யப்பட்டனர்; 53 வழக்குகள் சம்பந்தமாக இன்னும் விசாரணை நடைபெற்று வருகிறது; இலாகாபூர்வமாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்காக அனுப்பப்பட்ட 98 வழக்குகளில் நான்கு வழக்குகளில் குற்றவாளிகள் தண்டனை பெற்றனர்; ஒரு வழக்கில் சம்பந்தப்பட்டவர் விடுவிக்கப்பட்டார்; பாக்கியுள்ள வழக்குகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது" என்றும் அவர் கூறியுள்ளார்.

உண்மையை வெளிப்படுத்தும் கருவி!

நியூயார்க், மே 24—
அருகில் எவரும் இல்லை என்ற நம்பிக்கையில் எதை முணுமுணுத்தாலும் அப்படியே பதிவு செய்துவிடும் நவீன மின்சாரக் கருவியொன்று விற்பனைக்கு வந்துள்ளதாம்.

இந்தக் கருவி சாதாரண அளவுள்ள ஒரு அறையில் வைக்கப்பட்டால், பேச்சை ஒரு 'மைக்ராபோன்' கிரகித்து, உரோமம் போன்ற மெல்லிய கம்பிகள் அல்லது வானொலி ஒலிபரப்பு மூலம் சுமார் 220 கெசம் தூரத்திற்குக்கூட ஒலியை அனுப்ப முடியுமாம்.

பல பல கெசங்கள் தூரத்தில் முணுமுணுத்தால்கூட 'ஷாட் கன்' என்ற மற்றொரு கருவி ஒலிப்பதிவு செய்துவிடுமாம்!

இந்தி அபிவிருத்திக்கு மானியம் வழங்கினராம்!

புதுடில்லி, மே 24—
அபிவிருத்திக்காகவும் அதைப் பரப்புவதற்காகவும் 1956—57-ல் மொத்தம் ரூ. 2,83,905 இந்தி பேசப்படாத பல்வேறு மாநிலங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டதென்றும், மொத்தம் ரூ. 2,63,130 பல்வேறு இந்தி நிறுவனங்களுக்கு மானியமாக வழங்கப்பட்டதென்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மரண தண்டனை குறைப்பு

மாநிலங்களுக்குள்ள அதிகாரம்

பண்டித பந்த் தந்த விளக்கம் பற்றி கேரள முதலமைச்சர்

திருவனந்தபுரம், மே 22—
"மரண தண்டனைகளைக் குறைப்பதற்கு, மாநில சர்க்காருக்குள்ள அதிகாரம் பற்றிய அரசியல் சட்ட விதிக்கு மத்திய உள்நாட்டமைச்சர் தந்துள்ள வியாக்கியானம் சரியானதுதானா என்பதை ஆராயும் உரிமை எங்களுக்கு இருக்கிறது."

என்று, கேரள முதன் மந்திரி நம்பூதிரிபாட் பத்திரிகையாளரிடம் கூறியிருக்கிறார்.

'குடியரசுத்தலைவருக்கு கருணை மனு அனுப்பப்பட்டுள்ள நிலையில், கேரள சர்க்கார் ஒருவரின் மரண தண்டனையைக் குறைக்க முடியாது; என்று, பண்டித பந்த் நேற்று முன் தினம் மக்கள் சபையில் கூறியிருந்தார்.

அவர் குறிப்பிட்டது, 'வாசுப் பிள்ளை என்ற கம்யூனிஸ்டு ஒருவர் காங்கிரஸ் ஊழியர் ஒருவரைக் கொலை செய்த குற்றத்திற்காகத் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறார்; அவருக்காக, குடியரசு தலைவரிடம் ஒரு கருணை மனு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது; என்ற விவகாரத்தைத்தான்.

நம்பூதிரிபாட் மேலும் விளக்குகையில், குறிப்பிட்டதாவது:—

"அரசியல் சட்டம் பற்றிய ஒரு குறிப்பிட்ட ஒருவகையானவியாக்கியானம் இது; மேலும், மாநில சர்க்காரின் இந்தச் செயல், மத்திய சர்க்காரின், அதிகாரங்களில் குறுக்கிடுவதாகுமா என்பது குறித்துப் பரிசீலித்தாக வேண்டும்.

"இந்த வியாக்கியானம் சரியானதுதானா என்பதை நிர்ணயிக்கும் உரிமை எங்களுக்கு இருக்கிறது; இதற்கிடையில், மத்திய உள்நாட்டு மந்திரி கூறியிருக்கிறபடி, இந்தக் குறிப்பிட்ட விவகாரத்தில் நாங்கள் தொடர்ந்து நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போகிறோம். மேலும் இவ்விஷயத்தில், குடியரசுத் தலைவர் எங்கள் முடிவை ஏற்றுக் கொள்ளுவார் என்று நம்புகிறோம்"

'குடியரசுத் தலைவரின் தீர்ப்பு உங்களுக்கு விரோதமாக இருந்தால் என்ன செய்வீர்கள்' என்று கேட்டபோது, இந்த விவகாரத்தில் முடிவுகாண பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட வழிமுறை இல்லாவிட்டால், அரசியல் சட்ட விதிக்கு அதிகார பூர்வமான விளக்கம் தருமாறு தலைமை உயர் நீதிமன்றத்திடம் செல்ல வேண்டிவரும்; என்றும் நம்பூதிரிபாட் கூறியிருக்கிறார்.

குடியுரிமைகோருவோர் மனுக்கள் மீது முடிவு

"இலங்கையில் இந்திய வம்சாவழியினர் குடி உரிமை கோரி சமர்ப்பித்துள்ள மனுக்களை முடிவு செய்வதற்கு இலங்கை சர்க்கார் காலவரையறை எதையாவது நிர்ணயித்திருக்கிறார்களா?" என்று மாநிலங்கள் சபையில் கேட்கப்பட்டது.

வெளி விவகாரத் துணை அமைச்சர் இதற்குப் பதிலளித்ததாவது:—

"1954 ஜனவரியில் செய்து கொள்ளப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தப்படி, ஆரம்பக் கட்டத்தில் மனு பைசல் வேகம் மெதுவாக இருந்தது; ஆனால் மனுக்களைப் பைசல் செய்யும் வேலை இவ்வருடம் ஆகஸ்டுக்குள் பூர்த்தியாகிவிடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. 1957 மார்ச் 31-ந் தேதி வரை இலங்கை சர்க்கார் 6,15,977 பேர்கள் சம்பந்தப்பட்ட 1,87,636 மனுக்கள்மீது முடிவு செய்திருக்கிறார்கள்; இன்னும் முடிவு செய்ய வேண்டிய மனுக்களின் எண்ணிக்கை 38,997 - ஆகும்."

தாம்பரம்-விழுப்புரம் மின்சார இரயில்

திட்டம் ஒத்திவைக்கப்படுவதாகத் தகவல்

சென்னை, மே 23—
தாம்பரத்திலிருந்து விழுப்புரம்வரை மின்சார இரயில்.பாதை அமைக்கும் வேலை ஒத்திவைக்கப்படுவதாகவும், இதற்குக் காரணம், இந்த வேலையை மேற்கொள்ளுவதில் உள்ள ஒரு தொழில் நுட்பச் சிக்கல்தான் என்றும் தென் பிராந்திய இரயில்வே அதிகாரி டி. ஏ. ஜோசப் பத்திரிகையாடரிடம் கூறியிருக்கிறார்.

இந்தத் திட்டத்திற்கு ரூ. 3 கோடி செலவாகுமென மதிப்பிடப்பட்டிருப்பதாகவும், இந்தத் திட்டத்தின் நோக்கமே நிலக்கரியினால் இரயில்களை ஓட்டுவதற்காகும் செலவைக் குறைப்பதும், வடநாட்டிலிருந்து நிலக்கரி எடுத்து வருவதற்காக உபயோகிக்கப்படும் வாகன்களை வேறு அத்தியாவசியங்களுக்கு உபயோகப்படுத்தலாம் என்பதும்தான் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தென்பிராந்திய இரயில்வேயின் மொத்த வருமானம் 1956—57-ம் ஆண்டில் ரூ. 49,85,00,000 கோடியாக இருந்தது என்றும் அவர் தகவல் தந்திருக்கிறார்.

8,92,940 தறிகள் பதிவாகியுள்ளனவாம்!

சென்னையில் மட்டும் 4,32,603 தறிகளாம்!

புதுடில்லி, மே 25—
"1957 மார்ச் இறுதியில் மொத்தம் 8,92,940 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டிருந்தன; அவைகள் 4,32,603 சென்னையில் பதிவு செய்யப்பட்டவையாகும்" என்று மத்திய வர்த்தக மந்திரி மாநிலங்கள் சபையில் தெரிவித்துள்ளார்.

"உத்தரப் பிரதேசத்தில் 2,32,475 தறிகளும், பீகாரில் 68,485 தறிகளும், பம்பாய் 50,120 தறிகளும் பதிவு செய்யப்பட்டிருந்தன; கூட்டுறவு நிறுவனரீதியில் உள்ள தறிகள் பற்றிய தகவல்கள் கைத்தறிப் பதிவு உத்திரவுப்படி சேகரிக்கப்படவில்லை; ஓய்ந்திருக்கும் தறிகளின் எண்ணிக்கைப் பற்றி தகவல் இல்லை" என்றும் கூறியுள்ளார்.

மே தின விழா

26—5—57 இரவு 7 மணிக்கு, பெரியகலையம்புத்தூர் தி. மு. கழகச் சார்பில், வில்லாளன் கோட்டை மைதானத்தில் தோழர் பா. உசேன்சாபு தலைமையில் மே தின விழாப் பொதுக் கூட்டம் நடைபெறும். தோழர்கள் எஸ். எஸ். தென்னரசு ப. சண்முகம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர். தோழர் மெய்யன்பன் குழுவினரின் 'சிலப்பதிகாரச் சிறப்பு' வில்லுப் பாட்டும் நடைபெறும்.

பரமக்குடி வட்ட உழவர் சங்க அமைப்புக் கூட்டம்

26—5—57 மாலை 5 மணிக்கு, தி. மு. கழகத்தின் ஆதரவில் 'பரமக்குடி வட்ட உழவர் சங்க' அமைப்புக் கூட்டம், தாலுகா ஆபீஸ் கட்டிடத்தில் நடைபெறும்; உழவர் பெருமக்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டப்படுகிறார்கள்.

மதுரை பகுத்தறிவுப் படிப்பக ஆண்டு விழா

26—5—57 காலை 10 மணிக்கு மதுரை—பொன்னகரம் 1-வது தெருவில் மேற்படி படிப்பகத்தின் முதலாண்டு விழா தோழர் ஆர். எஸ். இராசன் தலைமையில் நடைபெறும்; தோழர்கள் சி. பி. சிற்றரசு, எஸ். ரூத்து, கே. எஸ். சந்தானம் சொற்பொழிவாற்றுவர்.

சென்னை 34-வது வட்டம் இளைஞர் மறுமலர்ச்சி மன்றம்

26—5—57 காலை 8 மணிக்கு, மன்றப் பணிமனையில், மன்ற நிர்வாகிகள் தேர்தல் நடைபெறும்; தோழர் சி. ஆர். கோலப்பா தேர்தல் ஆணையாளராக இருந்து நடத்திவைப்பார்.

கோவையில் தமிழ் விழா

நெடுஞ்செழியன், கண்ணதாசன் கலந்துகொள்கின்றனர்

26—5—57 காலை 9 மணி முதல் இரவு 9 மணிவரை, கோவை-முத்தமிழ்க் கலை மன்றத்தார் சார்பில், கோவைக்கிழார் - சி. எம். இராமச்சந்திரனார் தலைமையில், கோவை 'ஸ்டேன்ஸ் மில் கல்யாண மண்டபத்தில்' தமிழ் விழா நடைபெறும்; புலவர் - சா. மருதவாணனார் வரவேற்புரையோடு தொடங்கும் இவ்விழாவில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், தோழர்கள் கண்ணதாசன், சி. இலக்குவனார், ஔவை-துரைசாமி, மே. சுந்தரம், புலவர்-கிருட்டிணசாமி, வி. முனுசாமி, திருமதி புலவர்-தி. சிவகாமி ஆகியோர் சிறப்புத் தலைப்புகளில் சொற்பொழிவாற்றுவர்.

பாராட்டுக்கூட்டங்கள்

26—5—57 இரவு 7-30 மணி அளவில், அருப்புக்கோட்டை தி. மு. கழகச் சார்பில், தியாகராய வாலிபர் சங்க முன்பாக, பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்களைப் பாராட்டி ஓர் பொதுக்கூட்டம் தோழர் சிவ. சண்முகசுந்தரம் தலைமையில் நடைபெறும்; தோழர் எம். எஸ். இராமசாமி பாராட்டுரை வழங்குவார். பேராசிரியர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. நன்றியுரை ஆற்றுவார்.

* * *

26—5—57 மாலை 6-30 மணி அளவில், மன்னார்குடி தி. மு. கழகச் சார்பில், மன்னை தேரடியில் தோழர் மு. கருணாநிதி அவர்களைப் பாராட்டி தோழர் கே. பாலகிருட்டிணன் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் ப. நாராயணசாமி, என். அருணாசலம், கோ. சிவஞானம், இரே. கணேசன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். தோழர் மு. கருணாநிதி எம்.எல்.ஏ. அவர்கள் நன்றி உரையாற்றுவார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

25—5—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை, 59, சஞ்சீவிராயன் கோயில் தெரு, கே. எஸ். பாண்டியன் நினைவு மன்றம் 'அண்ணா சொல்லவை'யில் தோழர் ஆறுமுகம் தலைமையில் 'தேர்தல் அவசியமா' எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை—மயிலை சவுந்திரபாண்டியனார் படிப்பகம்

25—5—57 மாலை 6 மணிக்கு, மேற்படி படிப்பகத் திறப்பு விழா, தோழர் ஆர். அறிவழகன் தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் கோ. இளவரசு, பி. வி. ஆனந்தன், பி. இராமசாமி மற்றும் பலர் பேசுவர்.

சென்னை 29-வது வட்ட தி. மு. க பொது உறுப்பினர்கட்கு:

25—5—57 மாலை $6\frac{1}{2}$-மணிக்கு, மேற்படி வட்டப் பொது உறுப்பினர் கூட்டம் கழகக் கட்டிடத்தில் நடைபெறும்; அதுபோது, துணைச் செயலாளர் தேர்வும், ஆண்டு விழா பிரச்சினையும் ஆய்வுக்குவரும்.

சென்னையில்

புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டம்

★

26—5—57 மாலை 6 மணிக்கு சென்னை — கொத்தவால் சாவடி ஆச்சாரப்பன் தெரு வில், தோழர் தி. ம. பாலகிருட்டினன் தலைமையில், புது வரிகள் கண்டனப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

தோழர்கள் இரா. செழியன், ஏ. கே. வில்வம், டி. வி. நாராயணசாமி, வி. எஸ். கோவிந்தராசன், வி. டி. அரசு ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

28—5—57 அன்று அண்ணா நிகழ்ச்சிகள்

காலை 8-30 : சிறுகாவலூர் தி. மு. கழகத் திறப்பு விழா
,, 9-30 : பாலகிருட்டிணம்பட்டி தி. மு. கழகத் திறப்பு விழா
,, 10-30 : வலைப்பட்டி தி. மு. கழகத் திறப்பு விழா
பிற்பகல் 3-00 : நாகசல்லூர் திருவள்ளுவர் படிப்பகத் திறப்புவிழா
மாலை 5-30 : உப்பிலியபுரம் தி. மு. கழகத் திறப்பு விழா
,, 7-00 : கொப்பம்பட்டி பொதுக் கூட்டம்
இரவு 12-00 : ஒக்கரை (நாடகம்)

தேசுமுகப்பேட்டை, புதுவையில்

அண்ணா

12—6—57 அன்று தேசுமுகப் பேட்டை பொதுக்கூட்டத்திலும், 16—6—57 அன்று புதுவை பாராட்டுக் கூட்டத்திலும் கலந்துகொள்வார்.

'கொள்ளையடிப்பதற்கு ஒப்பாகும்'

சர்க்கார் காரியாலய ஊழியர் சங்கக் கண்டனம்

சென்னை, மே 23—

சென்னை செக்ரடேரியட் சங்கத்தின் கமிட்டிக் கூட்டத்தில் மத்திய அரசாங்கம் விதிக்க உத்தேசித்துள்ள புதிய வரிகளைக் கண்டித்துத் தீர்மானமொன்று நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

"புதிய வரிப் பிரேரபணைகள் நியாயமற்றவை; தாங்க முடியாதவை; மத்தியதர வகுப்பினரின் நம்பிக்கையை இவ்வரிகள் குலைத்துவிடுகின்றன; இந்தவரிகள் கொள்ளையடிப்பதற்கே சமமாகும்; இந்த வரிகள் மத்திய தர வகுப்பினரின் வாழ்வைச் சிதைவுறச் செய்யும்,"

என்று, அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

1,20,000 பேருக்கு 'இன்புளுயன்சா'

சிங்கப்பூர், மே 25—

மலேயாவில் இன்புளுயன்சா அதிகமாக பரவி வருகிறதாம்; 90,000 பேர்களுக்கு ஏற்பட்டிருந்த இந்நோய் இப்போது 1,20,000 பேர்களிடை பரவியுள்ளதாம்.

பெண் போலீஸ்!

உதகை, மே 23—

சென்னை மாநிலத்தில் சீக்கிரமே பெண் போலீசாரை நியமிப்பதென்று போலீஸ் அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

துவக்கத்தில் 7 பேர் கொண்ட இரண்டு போலீஸ் படைகள் சென்னை சென்டிரல் இரயில்வே நிலையத்திலும், எழும்பூர் இரயில் நிலையத்திலும் அமர்த்தப்படுவர்.

புது வரிகள் கண்டனக் கூட்டங்கள்

★

விருதுநகர் :

26—5—57 பிற்பகல் 3 மணிக்கு நாடார் பரிபாலன சங்க கட்டடத்திலிருந்து 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று புறப்படும்.

கோபி :

26—5—57 மாலை 4 மணிக்கு புதுப்பாளையம் தி. மு. கழகத்திலிருந்து 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று புறப்பட்டு, கோபி பெரியார் திடலை வந்தடையும்; மாலை 7 மணிக்கு கோபி பெரியார் திடலில் நடைபெறும் 'புது வரிகள் கண்டன'ப் பொதுக் கூட்டத்தில், தோழர்கள் எஸ். எஸ். எம். சுப்பிரமணியம், க. அன்பரசு ஆகியோர் பேசுவர்.

மேட்டூர் :

26—5—57 மாலை 6½ மணிக்கு மேட்டூர் சேவா சங்க மைதானத்தில் தோழர் முத்துசாமி தலைமையில், 'புது வரிகள் கண்டன'ப் பொதுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் அ. பாலு, க. கு. சின்னசாமி ஆகியோர் பேசுவர்.

சென்னை - மைலாப்பூர் :

26—5—57 பிற்பகல் 2 மணிக்கு ஹாமில்டன் வாராவதி 'பஸ்' நிலையத்திலிருந்து தோழர் பி. இராமசாமி தலைமையில், 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று புறப்பட்டு வட்டத்தின் பல பகுதிகளின் வழியாகச் சென்று, இராமகிருஷ்ணபுரம் 'உதய சூரியன்' படிப்பகத்தினருகில் வந்தடையும்; அங்கு ஓர் 'புது வரிகள் கண்டன'ப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை—இராயப்பேட்டை :

26—5—57 பிற்பகல் 3 மணிக்கு 37-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையிலிருந்து தோழர் ஏ. எல். கே. சாமி தலைமையில், 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று புறப்பட்டு வட்டத்தின் முக்கிய வீதிகள் வழியாக சேப்பியர் பூங்கா வந்தடையும்.

சென்னை 11-வது வட்டம் :

26—5—57 காலை 9 மணியளவில் எண் 4/88 பிராட்வே தெருவிலுள்ள தி. மு. கழகப் பணிமனையிலிருந்து 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று புறப்பட்டு வட்டத்தின் முக்கிய பகுதி வழியாக வரும்.

சென்னை 47-வது வட்டம்

26—5—57 பிற்பகல் 3 மணிக்கு சென்னை—எரிக்கரை கோழிப் பண்ணை, திரு. வி. க. நூல் நிலைய அருகிலிருந்து, 'புது வரிகள் கண்டன' ஊர்வலமொன்று தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெறும்; மாலை 6 மணிக்கு சைதை தர்மராசா கோவில் தெருவில் தோழர் தி. மா. திருநாவுக்கரசு தலைமையில், 'புது வரிகள் கண்டன'ப் பொதுக்கூட்டம் நடைபெறும்; தோழர்கள் டி. நாராயணன், அ. பொ. அரசு, ஏ. எஸ். ஜேசுபாதம், சே. ழ. காதர், சே. பே. காலமேகம் ஆகியோர் பேசுவர்.

சென்னை—திருவல்லிக்கேணி :

26—5—57 காலை 8 மணிக்கு சே. எஸ். பாண்டியன் படிப்பக பணிமனையில், தோழர் எம். கே. மணி தலைமையில் 'புது வரிகள் கண்டன நாள்' கூட்டம் நடைபெறும்; அதுபோது தோழர்கள் டி. ஏ. கிருட்டினன், மா. பா. சாரதி, நெல்லை-கபிலன் மற்றும் பலர் பேசுவர்.

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன்

அவர்களுக்கு

பெருஞ்சேரி ஊராட்சி மன்ற வரவேற்பு

★

பெருஞ்சேரி, மே 23—

27—5—57 மாலை 6 மணிக்கு, மாயூரம் வட்டம்—பெருஞ்சேரி ஊராட்சி மன்றத்தின் சார்பில், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு வரவேற்பளிக்கப்படும். (ஒ. நி.)

சென்னையில் கண்டன ஊர்வலம்

தோழர்களுக்கு வேண்டுகோள்

தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைப்படி 26—5—57 ஞாயிறன்று பகல் 2 மணிக்கு நகரின் இருபகுதிகளிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு கீழ்க்கண்ட தெருக்களின் வழியாகச் சுற்றி, கொத்தவால் சாவடியில் நடைபெறும் பொதுக் கூட்டப் பந்தலை அடையும் :—

முதல் பகுதி :— இராயபுரம் 'அறிவகத்'திலிருந்து புறப்பட்டு கல்மண்டபம் ரோடு, மணிகார் சத்திரம் ரோடு, ஜாண்ரபிள்ளையார் கோயில் தெரு, திருவொற்றியூர் ஐரோடு, பழைய ஜெயில் ரோட், பிராட்வே, கொத்தவால்சாவடி.

இரண்டாம் பகுதி :— சிந்தாதிரிப்பேட்டை நேப்பியர் பார்க்கிலிருந்து புறப்பட்டு, சாமி நாய்க்கன் தெரு, அருணாசல நாய்க்கன் தெரு, ஜெனரல் ஆஸ்பத்திரி ரோட், வால்டாக்ஸ் ரோட், அண்ணாபிள்ளை தெரு—கொத்தவால் சாவடி.

ஊர்வலத்தில், கீழ்க்கண்ட வாசகங்களை மட்டுமே முழக்கும்படி தோழர்கள் வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள். கீழ்க்கண்டவை தவிர்த்த, மற்ற ஒலிகளைக் கண்டிப்பாகவும் — கட்டுப்பாடாகவும் தவிர்க்குமாறு வேண்டுகிறோம்.

ஊர்வலத்தில் கலந்துகொள்ளும் தோழர்கள் அமைதி கெடாமல் — கண்ணியம் பழுதுபடாமல் - கட்டுப்பாட்டை மீறாமல் - கடமையுணர்ச்சியுடன் நடந்துகொள்ள வேண்டுகிறோம்.

சென்னை 'அறிவகம்'
24—5—57

தலைமைக் கழகம் (தி. மு. க.)

ஊர்வலத்தில் முழக்க வேண்டிய வாசகங்கள் :—

தேயிலை வரியைக்	கூட்டாதே!
காப்பி வரியை	உயர்த்தாதே!
தீப்பெட்டி வரியைக்	கூட்டாதே!
சர்க்கரை வரியை	உயர்த்தாதே!
கார்டு வரியைக்	கூட்டாதே!
புகையிலை வரியை	உயர்த்தாதே!
புதிய வரிகளை	வாபஸ் வாங்கு!
சிமிண்ட் வரியை	உயர்த்தாதே!
ரயில் கட்டணத்தைக்	கூட்டாதே!
உணவுப் பொருள் விலையைக்	குறை!
அரிசி விலை ஏற்றத்தைத்	தடை செய்!
நிதி மந்திரியே	ராஜினாமா செய்!
புது வரிகள்மீது	பொதுத் தேர்தல் வை!

கழகக் கூட்டங்கள்

★

பெருஞ்சேரி

(தஞ்சை மாவட்டம்)
ரிஷி திடலில்
27—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
பி. வேங்கடகிருட்டிணன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
என். கிட்டப்பா
(பெருஞ்சேரி, மங்கநல்லூர் கடை வீதிக்கு வட கிழக்கே அரை கல் தூரத்தில் உள்ளது.)

★

கள்ளிமடை :

பள்ளி மைதானம்
27-5-57 மாலை 5-30 மணிக்கு
தி. மு. கழகத் துவக்க விழா
தலைவர் :
க. வே. வேலுமயில்
பேசுபவர் :
கண்ணதாசன்

★

திருபுரந்தான்

(தஞ்சை மாவட்டம்)
28—5—57 மாலை 6 மணிக்கு
தி. மு. கழகத் திறப்பு விழா
தலைவர் :
நா. வே. கலியபெருமாள்
கொடியேற்றுபவர் :
து. இராமாநுசம்
அண்ணா படத் திறப்பு:
எஸ். இராமசாமி
பேசுவோர் :
பா. வே. செயராமன்
ஆ. ம. லூயி
கோவிந்தராசு
து. அரங்கராசன்

★

கடையம் :

27—5—57 இரவு 8 மணிக்கு
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
வை. அருணசலம்

★

விருதுநகர் :

அம்மன்கோயில் பொட்டலில்
28—5—57 இரவு 8 மணிக்கு
பேசுவோர் :
சத்தியவாணிமுத்து எம்.எல்.ஏ.
சுப்பையா. பாஸ்கரன்
இரத்தினம், அரங்கநாதன்
இரா. சேனார்த்தனம்
(மாலை 5 மணிக்கு மேல ரத வீதியில் கொடியேற்று விழா நடைபெறும்.)

திருவலம் (வ. ஆ.) தி.மு.க. துவக்க விழா — மே தின விழா

27—5—57 மாலை 6 மணிக்கு மேற்படி இரு விழாக்களும், தோழர் எம். பி. சாரதி எம்.எல்.ஏ., அவர்கள் தலைமையில் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் என். எஸ். இளங்கோ, ப. கண்ணன் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

மே தின விழா — தி. மு. கழகப் பணிமனைத் திறப்பு விழா — திருமணப் பாராட்டு விழா

26—5—57 காலை 8-30 மணி அளவில், சென்னை 46-வது வட்டம், தேனாம்பேட்டை — திருவள்ளுவர்சாலை, எண்-1, கழகப் பணிமனையில் மேற்கண்ட மூன்று விழாக்களும் நடைபெறும்; விழாவில் தோழர் டி.வி. நாராயணசாமி சொற்பொழிவாற்றுவார்.

க. அன்பழகன்

சுற்றுப்பயணம்

மே 26 : அருப்புக்கோட்டை மாலை—உயர்நிலைப் பள்ளி பழைய மாணவர் மன்ற விழா
இரவு—கழகப் பொதுக் கூட்டம்
27 : திருநெல்வேலி
28 : சாத்தன்குளம்
29 : கல்லிடைக்குறிச்சி
30 : பத்தமடை
31 : கடையநல்லூர்
ஜூன் 2 : தென்காசி

திருமண அழைப்பு

29-5-57 புதன் காலை 9-மணிக்கு
திண்டுக்கல் சோலை ஹாலில்
மா. தங்கவேலர்—கமலம் அம்மையார்
கே. செயராமன்—வேலு அம்மையார்
ஆகியோரின் திருமண விழா
அண்ணா அவர்கள்
தலைமையில் நடைபெறும்
என். வி. நடராசன், மா.கி. தசரதன்,
எஸ். முத்து, பி. சமதர்மம்
வாழ்த்துரை வழங்குவர்.

சென்னை கல்விச் சங்கம்

26—5—57 மாலை 5 மணிக்கு, சென்னை கல்விச் சங்க ஆதரவில், பட்டாளம் - ஸ்ட்ரான்ஸ் ரோடு ஆண் பள்ளியில், தோழர் தொ. இரா. செயராமன் அவர்கள் தலைமையில் தோழர் வி. ப. கோவிந்தசாமி அவர்கள் 'அம் நரவு' என்னும் பொருள் பற்றி பேசுவார்.

தோழமை படிப்பகத் துவக்க விழா

26-5-57 மாலை 5-30 மணிக்கு, காஞ்சிபுரம் அடுத்த (திம்மராசாம் பேட்டை) மதுரா வீரப்பராசாம் பேட்டையில், தோழர் எஸ். சிவஞானம் தலைமையில், மேற்படி படிப்பகத் துவக்க விழா நடைபெறும்; தோழர் என். சீவரத்தினம், சி. வி. எம். அண்ணாமலை, தோழியர் அலமேலு அப்பாதுரையார் ஆகியோர் சொற்பொழிவும், தோழர் கா.வே. முருகேசன் இசை விருந்தும் நடைபெறும்.

வண்ணை தமிழ் இளைஞர் கழகம்

26—5—57 காலை 10 மணிக்கு, சென்னை—வண்ணை தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில், திரு. அ. ஞானசுந்தரம் அவர்கள், திருக்குறளில் 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரத்தை விரித்துரைப்பார்.

சொற்பயிற்சிக் கூட்டம்

25—5—57 இரவு 8 மணிக்கு, சென்னை - பார்க் டவுன் இளைஞர் முத்தமிழ் மன்றச் சார்பில், (28-வது வட்டம்) பார்க் டவுன் 2/2 நைனியப்ப நாய்க்கன் தெருவில், தோழர் த. சேதுராமன் தலைமையில் 'அன்பு' எனும் பொருள்பற்றி தோழர்கள் பலர் பேசுவர்.

ஒக்கரையில் முத்தமிழ் ஆண்டு விழா

28-5-57 மாலை 6-30 மணிக்கு, ஒக்கரை - திருவள்ளுவர் படிப்பகத்தின், 3-வது முத்தமிழ் ஆண்டு விழா தோழர் ஒ. நா. நடராசன் தலைமையில் ஒக்கரை மாரியம்மன் கோவில் திடலில் நடைபெறும்; அதுபோது, புலவர் வீ. சி. கிருட்டிணசாமி 'வள்ளுவர் காட்டிய வழி' எனும் பொருள் பற்றி சிறப்புரையாற்றுவார். இரவு 9 மணிக்கு இளங்கோ மன்றத்தாரால் 'சிந்தனை சிற்பி' என்ற நாடகம் நடைபெறும்.

திருமணம்

26—5—57 காலை 8 மணிக்கு, சென்னை - சாசிபுரம் தோழர் செல்வம் — தோழியர் இராசம் வாழ்க்கை ஒப்பந்தவிழா தோழர் என். சீவரத்தினம் தலைமையில், சென்னை - இராயபுரம் சூரிய நாராயண செட்டித் தெரு, 'எ' பிளாக் காசிபுரம் மணமகன் இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் காஞ்சி - கல்யாணசுந்தரம், ஏ. கே. வில்வம், தோழியர் இரா. ச. தாமரைச்செல்வி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். மாலை 6-30 மணிக்கு, டேப் - இராதாமாணிக்கம் குழுவினரால் இன்னிசை நடைபெறும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.